### கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில்

# சிறுநீரக டயாலிசிஸ் - அதிநவீன மூளை நரம்பு மின்காந்த சிகிச்சை கருத்தரங்கு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.2-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (01.08.2023) சென்னை, கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சிறுநீரக டயாலிசிஸ் பிரிவு, அதிநவீன மூளை நரம்பு மின்காந்த சிகிச்சை இயந்திரம் தொடங்கி வைத்து, தமிழ்நாடு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையம் மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி இணைந்து நடத்தும், மூளைச் சாவு அடைந்த நபரிடம் இருந்து உறுப்பு தானம் பெறுவது குறித்தான கருத்தரங்கினை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

**சிறுநீரக டயாலிசிஸ் பிரிவு**

முதலமைச்சர் அவர்களால் 15.06.2023 அன்று 1000 படுக்கை வசதிகள் மற்றும் 19 உயர் சிறப்பு துறைகளுடன் சென்னை, கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை தொடங்கப்பட்டது. இந்த மருத்துவமனை தொடங்கப்பட்ட நாள்முதல் தற்போது வரை 18,454 புறநோயாளிகள், 480 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும், 43 அறுவை சிகிச்சைகள், 6,551 இரத்தப் பரிசோதனைகள், 382 சி.டி. ஸ்கேன் பரிசோதனைகள், 496 எக்ஸ்ரே பரிசோதனைகள், 89 குடல் உள்நோக்கு எண்டோஸ்கோப்பி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த மருத்துவமனையில், பல்வேறு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் நேற்று, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த மருத்துவமனையில் 60 படுக்கை வசதிகள் கொண்ட சிறுநீரக டயாலிசிஸ் பிரிவில், முதற்கட்டமாக ரூ.1.25 கோடி செலவில் 20 அதிநவீன டயாலிசிஸ் இயந்திரங்கள் மற்றும் ரூ.25 இலட்சம் செலவில் 4000 லிட்டர் R.O குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் இன்று திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதன் மூலம், நவீன டயாலிசிஸ் பிரிவில் நாளொன்றுக்கு 120 பேருக்கும், மாதமொன்றுக்கு 3000 பேரும் சிகிச்சை பெறலாம். மேலும், கல்லீரல் வைரஸ் "B" மற்றும் "C" பாதிப்படைந்தோருக்கு உரிய பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டு டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்படும். மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் இந்த மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை பெறலாம்.

**மூளை நரம்பு மின்காந்த சிகிச்சை இயந்திரம்**

மூளை நரம்பியல் மருத்துவ சிகிச்சை பிரிவில், ரூ.75 இலட்சம் செலவில், அதிநவீன மூளை நரம்பு மின்காந்த சிகிச்சை இயந்திரம் நிறுவப்பட்டு இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த அதிநவீன மூளை நரம்பு மின்காந்த சிகிச்சை இயந்திரமானது பாதிக்கப்பட்ட மூளை நரம்பு பகுதிகளை மின்காந்த அலைகளைக் கொண்டு தூண்டுதல் மூலம் பல நரம்பியல் நோய்கள் மற்றும் மனநல நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும். மேலும், இந்த அதிநவீன இயந்திரம் மூலமாக மன அழுத்தம், ஒற்றை தலைவலி, தசை இயக்க நோய்கள், பக்கவாதம், நாள்பட்ட வலி மற்றும் மனச்சிதைவு நோய்களுக்கு சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்படும். ஆக மொத்தம் ரூ.2.25 கோடி செலவில் 20 அதிநவீன டயாலிசிஸ் இயந்திரங்கள், R.O குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் அதிநவீன மூளை நரம்பு மின்காந்த சிகிச்சை இயந்திரம் இன்று தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

**உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை கருத்தரங்கம்**

மேலும், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான இணையவழி கருத்தரங்கம் (*Webinar on Deceased Donor Organ Transplantation*) இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதில், இறந்த நன்கொடையாளரின் பராமரிப்புகள், மூளை இறப்பு சான்றிதழ் செயல்முறை, இறந்த நன்கொடையாளர் உறுப்பு மீட்பு - கண்ணோட்டம், ஆகியவை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008 ஆம் ஆண்டு, செப்டம்பர் 5 ஆம் தேதி அன்று தமிழ்நாடு அரசின் மூளைச் சாவு உறுப்பு மாற்று சிகிச்சை திட்டம் தொடங்கப்பட்டது. இது, 2015 ஆம் ஆண்டு அரசாணை(396) நாள் 12.12.2014 மூலமாக தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையமாக உருவாக்கப்பட்டது. இதற்கு தலைவர் முதலமைச்சர் ஆவார். தி.மு.க. தலைமையிலான அரசு பெறுப்பேற்பதற்கு முன்பு 13 அரசு மருத்துவமனைகளில் மட்டுமே உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வந்தது. மீதமுள்ள 27 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் உறுப்பு தானம் பெறுவதற்கான உரிமம் இல்லாமல் இருந்தது. பின்னர், அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி முதல்வர்களுடன் 31.07.2022 அன்று நடத்தப்பட்ட ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு 27 அரசு மருத்துவமனைகளுக்கு உறுப்பு தானம் பெறுவதற்கான *Non Transplant Organ Retrieval Centre (NTORC)* உரிமம் வழங்கப்பட்டது. இந்தியாவிலேயே மாநில அரசு நடத்தும் மருத்துவமனைகளில் அதிக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் தமிழ்நாட்டில் தான் செய்யப்படுகிறது.

உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் - சிறப்பாக செயல்படும் மருத்துவமனைக்கு விருதுகள்.

முதலமைச்சர் அவர்களால், உறுப்பு தானத்திற்கு அதிக முக்கியத்துவம் தரும் வகையில், அடுத்த ஆண்டு முதல் ஆகஸ்டு திங்கள் 15 ம் தேதி சுதந்திர தின விழாவில், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மிக சிறப்பாக செய்யும் மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது. உறுப்பு தானத்தை ஊக்குவிப்பது, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை சிறப்பாக செய்வது, இறந்தவர்களின் உடலில் இருந்தும், மூளைச்சாவு அடைந்தவர்களிடமும், உறுப்புகளை கொடையாக பெறுவது போன்ற பல்வேறு விஷயங்களை கணக்கில் எடுத்து, எந்த அரசு மருத்துவமனை மிக சிறப்பாக செய்து வருகிறதோ, அந்த மருத்துவமனையின் முதல்வர் அவர்களுக்கு ஆண்டுதோறும், சுதந்திர தின விழாவில் விருது வழங்கப்படும்.

**கொரோனா காலத்தில் பணியாற்றியவர்களுக்கு கூடுதலாக 5 மதிப்பெண்கள்**

தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (MRB) மூலம் 1021 மருத்துவர்கள், 983 மருந்தாளுநர்கள், 1066 சுகாதார ஆய்வாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 14 மருத்துவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர். அதில், அவர்கள் கொரோனா காலத்தில் பணியாற்றிய மருத்துவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று கோரிக்கையும் வைத்திருந்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னரே District Health Society மூலம், மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் போன்ற பணிநியமனங்களில் கொரோனா காலத்தில் பணியாற்றியவர்களுக்கு சிறப்பு மதிப்பெண்களை கொடுத்து பணியில் அமர்த்தப்பட்டுள்ளது. 4000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் பணிநியமனம் செய்ததில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. அண்மையில் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்ட 500 நகர்புற நலவாழ்வு மையங்களில் மருத்துவர்களை நியமிக்கும் போதும் முன்னுரிமை மதிப்பெண்கள் கொடுத்து பணியமர்த்தப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2 ஆண்டுகள் கொரோனா பேரிடர் காலத்தில் பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருந்தாளுநர்கள் ஆகியோர்களை MRB மூலம் பணிநியமனம் செய்யும்போது கூடுதலாக 5 மதிப்பெண்கள் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. இரா.சாந்திமலர், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையம் உறுப்பினர் செயலாளர் மரு. கோபாலகிருஷ்ணன், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, மருத்துவமனை சிறப்பு அலுவலர் மரு. ரமேஷ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகாராஷ்டிராவில் கட்டுமானப் பணி

# விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 3-

மகாராஷ்டிரா மாநிலம் கட்டுமானப் பணியிடத்தில் கிரேன் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை -தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

மகாராஷ்டிரா மாநிலம் தானேயில் விரைவுச்சாலை திட்டத்துக்கான பாலம் கட்டுமானப்பணியின் போது ராட்சத கிரேன் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர்களில் இருவர் கிருஷ்ணகிரி மாவட்டம், போகனப்பள்ளி ஊராட்சி, வி.ஐ.பி. நகரைச் சேர்ந்த சந்தோஷ் (வயது 36) மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம் ஆயக்காரன்புலத்தைச் சேர்ந்த கண்ணன் (வயது 23) என்றும் கேள்வியுற்று மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை விமான நிலையத்திலிருந்து சொந்த ஊருக்குக் கொண்டு செல்ல தமிழ்நாடு அரசின் பொதுத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் மூலம் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மேற்கொண்டார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரர் எம்.எஸ்.சுதர்சன் - மேற்கு ஆஸ்திரேலியா

# பேட்மிண்டன் போட்டியில் கலந்து கொள்ள ரூ 3.20 லட்சம் நிதியுதவி!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, ஆக. 3 -*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரர் எம்.எஸ்.சுதர்சனுக்கு மேற்கு ஆஸ்திரேலியா பார பேட்மிண்டன் போட்டியில் கலந்து கொள்வதற்காக ரூபாய் 3.20 லட்சம் நிதியுதவியினை வழங்கினார்.*

*அதன் விபரம் வருமாறு :*

*நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரர் எம்.எஸ்.சுதர்சன், அக்டோபர் மாதம் மேற்கு ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ள பாரா பேட்மிண்டன் போட்டியில் கலந்து கொள்கிறார். பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரருக்கு, போட்டியில் கலந்து கொள்வதற்காக நுழைவுக் கட்டணம், விமான கட்டணம், பயிற்சி, உணவு மற்றும் தங்கும் கட்டணமாக தமிழ் நாடு சாம்பியன்ஸ் அறக் கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 3.20 லட்சத்திற்கான காசோலையினை சென்னை முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (01.08.2023) நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.*

*மேலும், புதுடெல்லியில் 2023 ஜூலை 22 முதல் ஜூலை 24 வரை நடைபெற்ற தேசிய செரிபிரல் பால்சி (Cerebral palsy) நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற பெருமூளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட 5 நீச்சல் வீரர்கள், அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இவர்களுக்கு அமைச்சர் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார்.*

### கோவை தெற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், கோவை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட என்.வேலுச்சாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

கோவை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, ஆகஸ்ட் 5 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் கோவை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர் / ஒன்றிய / நகர /பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.08.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.


# GREATER CHENNAI CORPORATION
# ZONE - 13

Z.O.13.C.No.C3/1224/2023

**E-TENDER NOTICE**

e-Tender are Invited for the following works as per details furnished below
2022 - 23 south chennai constituency MP LADS Fund
Proposed Construction of Community Hall at Vankatapuram in Division - 169, Unit - 40, Zone - 13

| Approx. Value of Work | EMD Rs. |
|---|---|
| Rs. 1,25,68,535.65 | Rs. 1,25,700.00 |

1. Tender Last Date and Time of Submission 29.08.2023 up to 3.00 pm
2. Tender Open Date and Time 30.08.2023 on 3.30 pm

DIPR / 4187 / Tender / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**Zonal Officer / Zone - 13**

# பெருநகர சென்னை மாநகராட்சி
# பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/3424/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| **மண்டலம் - 3,4,6,11,13 & 14 உள்ள 32 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023-24)** | **36, 41 & 50** | **குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.77.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.81.00 இலட்சங்கள்** | **பணியின் மதிப்பு 1 சதவீதம்** | **முதல் வகுப்பு** |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **17.08.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **18.08.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4186 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

தமிழ்நாடு அரசு
# நெடுஞ்சாலைத்துறை
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.19/2023–2024/வ1/நாள்–31.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **தூத்துக்குடி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **(வ.எண்.1 இரு உறை முறையில் மற்றும் வ.எண்.2 ஒரு உறை முறையில்)** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2023 – 14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4214/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருநெல்வேலி**

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) – (இரண்டு உறை) –**
**இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்**

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண். | **21**/ கோ. / வஅ **1** / ஒ பி / 2023/ நாள்.28.07.2023 |
| நிதி | அம்ருத் 2.0 /மூலதன மானிய நிதி/மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி/கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் |
| ஒப்பந்தக்காரர் தகுதி | முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்) |
| ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர் | தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா, மதுரை, தமிழ்நாடு |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் | **07.08.2023** முதல் **05.09.2023, 15.00** மணி வரை |
| ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை | Online முறையில் இணையதளம் **https://tntenders.gov.in** மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம் | **21.08.2023** அன்று முற்பகல் **11.00** மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வா, மதுரை. |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | **05.09.2023** அன்று **15.00** மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் **https://tntenders.gov.in** மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | **07.09.2023** அன்று **15.30** மணிக்கு த. கு. வ. வாரியம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், மதுரை மின்னணு ஒப்பந்தம் முறையில் |

| ஒ. கே. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18 % உட்பட) | முன்வைப்பு தொகை |
|---|---|---|---|
| 21 | தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் மற்றும் அப்பணிகளை பராமரித்தல் (பணி காலம் 18 மாதங்கள் + சோதனை ஓட்டம் – 6 மாதங்கள் + கட்டண பராமரிப்பு 60 மாதங்கள்) | ரூ. **335.00** கோடி | ரூ. **167.50** இலட்சம் |

செ.ம.தொ.இ/ 4219 /ஒப்பந்தப்புள்ளி/2023 **தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**தலைமைப் பொறியாளர் (பொ),**
**த.கு.வ.வாரியம், மதுரை.**

தமிழ்நாடு அரசு
## மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒ.அ.எண்.22 / 2023 - 24 / தவஅ / நாள்: 28.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி - 2023-24** தலைப்பின் கீழ் **சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் மதுரை, (நெ) க(ம)ப** கோட்டங்கள் சார்ந்த பணிகளுக்கு **இணைய வழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளி **22.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**செ.ம.தொ.இ /4154 / ஒப்பந்தப்புள்ளி / 2023**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப, மதுரை வட்டம்.**

தமிழ்நாடு அரசு
# நெடுஞ்சாலைத்துறை
**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒ.அ. எண். 16/2023-24/ தவஅ / நாள் : 27.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24 -ன் கீழ் விழுப்புரம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-055) ஒரு பணிக்கு **இணையவழியில்** ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.08.2023, 15.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **07.08.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 4165 /ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**

தமிழ்நாடு அரசு
# நெடுஞ்சாலைத்துறை
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவண்ணாமலை**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.21/2023–2024/தவஅ/நாள்–29.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 மற்றும் திட்டம் சாரா பணிகள் 2023–24, செய்யார், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை (நெ), க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த பணிகளில் **இரண்டு** பணிக்கு இரு உறைமுறையிலும் இதர **ஐந்து** பணிகளுக்கு ஒரு உறை முறையிலும் (7 பணிகளுக்கு) இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.08.2023 அன்று 12.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4170/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருவண்ணாமலை**

தமிழ்நாடு அரசு
# நெடுஞ்சாலைத்துறை
**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒ.அ. எண். 15/2023-24/ தவஅ / நாள் : 26.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24 -ன் கீழ் விழுப்புரம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-054) ஒரு பணிக்கு **இணையவழியில்** ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **07.08.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 4164 /ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சைதை கா. கிட்டு

### ஆகஸ்ட் 3 (2011)



**இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 'சைதை கிட்டு – செயலில் சிட்டு' என்று பாராட்டப்பட்டதோடு, "சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு" என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.